1981 மார்ச் 5]

ஆத்தூர் நகரில் மண்டல போக்குவரத்து அலுவலகம்.

*வினா எண். 391—திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் மண்டலப் போக்கு வரத்து அலுவலகம் அமைக்க உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. சி. பழனிமுத்து: தலைவரவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரில் மண்டல போக்குவரத்து அலுவலகம் அமைக்க வில்லை என்றாலும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலையம் ஒன்றையாவது ஏற்படுத்த வேண்டும். மோட்டார் வாகன ஆய் வாளர் நிலையம் ஆத்தூரிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள ராசிபுரத்தில் இருக்கின்றது. ஆகவே அவ்வளவு தூரம் செல் வதைத் தவிர்க்கின்ற வகையில் ஆத்தூரிலேயே ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வாகனங்களின் எண்ணிக்கை இருந்தால் தான் அதாவது 500 வாகனங்களாவது இருந்தால் தான் அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட அலுவலகம் ஏற்படுத்தப்படும். ஆனால் 321 வாகனங்கள் தான் அந்தப் பகுதியிலே ஓடிக் கொண்டிருக் கின்றன. அங்கே போதிய எண்ணிக்கையை எட்டிப்பிடிக்கின்ற போது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இல்லையென்றால், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை வாரத்திற்கு இருமுறை ஆத்தூர் நகரத் திற்கு வரச் செய்து, அவைகளை பரிசிலனை செய்து, அந்த வாகனங்களுக்கு அனுமதி அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அலுவலர்களோ, அலுவலகங்களோ அங்கே வருவ தற்கு பதில், வாகனங்கள் இங்கே போவது மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.